மொராக்கோ

# மசூதி இடிந்து 41 பேர் பலி



வட ஆப்பிரிக்க நாடான மொராக்கோவில் மசூதியின் கோபுரம் இடிந்து விழுந்ததில் 41 பேர் பலியாகினர். 71 பேர் காயமடைந்தனர். மொராக்கோவின் புராதன நகர்களில் ஒன்றான மெக்னெசில் கடந்த சனிக்கிழமை மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இந்த மசூதி 400 ஆண்டுகளுக்கு முன்னதாக கட்டப்பட்டது. இதன் கோபுரம் பலமிழந்து காணப்பட்டுள்ளது. இந்நிலையில் வெள்ளிக்கிழமை பெய்த கடும் மழையில் கோபுரம் மேலும் பலமிழந்ததே இவ்வளவு பெரிய விபத்துக்கு காரணம் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து கேள்விப்பட்டதும் அந்நாட்டு மன்னர் முகமது, உள்துறை அமைச்சரையும், சமய விவகாரத் துறை அமைச்சரையும் சம்பவ இடத்துக்கு அனுப்பி பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யுமாறு உத்தரவிட்டார். அரசு அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு உடனடியாக சென்றனர். மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை சந்தித்து ஆறுதல் கூறினர். காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த 76 பேர் சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பினர். இன்னும் 30 பேர் மட்டும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அரசு அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. யுனெஸ்கோவால் புரதான சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ள பழமை வாய்ந்த மசூதியை சீரமைக்க மன்னர் மொஹமத் உத்தரவிட்டுள்ளார். அத்துடன், இடிந்த பள்ளிவாசலை அதன் பழமை மாறாமல் புதிதாக கட்டப்படும் என்று அந்த நாட்டு மன்னர் 6ம் முகமது அறிவித்தார்.

சீனா

# ஒபாமா – தலாய் லாமா சந்திப்பு அமெரிக்காவுக்கு கடும் கண்டனம்

### சீனாவிடமிருந்து நாங்கள் பிரிய விரும்பவில்லை என தலாய் லாமா அறிவிப்பு



தலாய் லாமாவை ஒபாமா கடந்த வாரம் சந்தித்தது தொடர்பாக, அமெரிக்காவுக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்கத் தூதரை நேரில் வரவழைத்து, தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது. திபெத் பகுதியை 50 ஆண்டுகளுக்கு மேலாக சீனா ஆக்கிரமித்து வருகிறது. திபெத்துக்கு சுயாட்சி கோரி, திபெத்திய புத்தமத தலைவர் தலாய்லாமா, உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டி வருகிறார். ஆனால் அவரை யாரும் சந்திக்கக் கூடாது என்று உலகத் தலைவர்களை சீனா வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்க அதிபர் ஒபாமாவை சந்திக்க தலாய்லாமா திட்டமிட்டார். ஆனால் தலாய் லாமாவை சந்தித்தால், அமெரிக்க - சீன நட்புறவு பாதிக்கப்படும் என்று சீனா எச்சரிக்கை விடுத்தது. ஆனால் இந்த எச்சரிக்கையையும் மீறி, தலாய் லாமாவை கடந்த வெள்ளிக்கிழமை ஒபாமா அழைத்துப் பேசினார். அப்போது, திபெத் மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

இந்த சந்திப்பால், கடும் கோபமடைந்த சீனா, தமது நாட்டிற்கான அமெரிக்க தூதர் ஜோன் ஹன்ட்ஸ்மேனை நேரில் வரவழைத்து, தனது ஆட்சேபனையைத் தெரிவித்தது. சீன துணை வெளியுறவு அமைச்சர் குய் தியாங் இந்த ஆட்சேபனையை அவரிடம் தெரிவித்தார்.

மேலும், அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் மா ஜாவோசு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர், தலாய் லாமாவை ஒபாமா சந்தித்ததற்கு சீனா தனது கடும் அதிருப்தியையும், உறுதியான எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறது. இது, சர்வதேச உறவுகளில் பின்பற்றப்படும் விதிமுறைகளை முற்றிலும் மீறிய செயல். அமெரிக்க - சீன கூட்டு அறிக்கையையும் மீறிய செயல். திபெத்தை சீனாவின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வதாகவும், திபெத் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றும் அமெரிக்கா பல தடவை உறுதி அளித்துள்ளது. இந்த சந்திப்பு, அதற்கு எதிராக அமைந்துள்ளது.

சீனாவின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடக்கூடாது. சீனாவுக்கு எதிரான பிரிவினைவாத சக்திகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கக் கூடாது. அமெரிக்க - சீன உறவுகளில் ஆரோக்கியமான, சீரான வளர்ச்சி ஏற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்க வேண்டும். இச்சந்திப்பால் ஏற்படும் கெட்ட விளைவுகளை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, ஒபாமா - தலாய் லாமா சந்திப்பு குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது, திபெத்தை சீனாவின் ஒரு பகுதியாக அமெரிக்கா ஏற்கிறது. அதே சமயத்தில், திபெத் பகுதியின் மனித உரிமைகள் குறித்து கவலைகொள்கிறது. அப்பகுதியின் கலாசார உரிமைகளுக்கு தொடர்ந்து ஆதரவு தெரிவிப்போம். இப்பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்துவதை ஆதரிக்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சீனாவிடமிருந்து பிரிய வேண்டும் என நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் சீனர்கள், மத சுதந்திரத்தை நசுக்குவதுதான் எங்களுக்குக் கவலை தருகிறது என்று கூறியுள்ளார் தலாய் லாமா. இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், சீனர்கள் மீது நாங்கள் அன்பு நிறைய வைத்திருக்கிறோம். ஆனால் சீனா, தனது தாயகத்தில் நடத்தி வரும் கலாச்சார நசுக்கல் நடவடிக்கைகள் எங்களைக் கவலைப்படுத்துகின்றன. மத சுதந்திரத்தை அவர்கள் மதிக்காத நிலையைக் கடைப்பிடித்து வருவது கவலை தருகிறது.

சீனாவில் உள்ள சில தீவிர கருத்து உடையவர்கள்தான், மத சுதந்திரத்தை எதிர்ப்பவர்கள்தான் எங்களுக்கும், சீன அரசுக்கும் இடையே நல்லுறவு ஏற்படாமல் தடுத்து வருகிறார்கள். இவர்களின் கொள்கைகள் மிகவும் எரிச்சலைத் தருகின்றன. இருப்பினும் நாங்கள் சீனர்கள் மீது வைத்துள்ள அன்பு இன்னும் மாறவில்லை. சீனாவிடமிருந்து நாங்கள் பிரிய விரும்பவே இல்லை. ஏனென்றால் திபெத்தின் தேவைகளுக்கும், வளர்ச்சிக்கும் சீனா அவசியமான ஒன்று. ஒவ்வொரு திபெத்தியரும் தனது தாயகம் நவீனமாக வேண்டும் என்ற ஆசையுடன் உள்ளார். அது சீனாவுடன் இருந்தால்தான் முடியும். இதனால்தான் நாங்கள் சீனாவை விட்டுப் பிரிய விரும்பவில்லை என்றார் தலாய் லாமா.

உகண்டா

# தேவாலயத்தில் ஆபாசப் படம் – பாதிரியார் மீது வழக்கு

ஆபிரிக்க நாடான உகாண்டாவில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது குற்றமாகும். இதில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும் சட்டத்தில் இடம் உள்ளது. இந்த சட்டத்தை நீக்க வலியுறுத்தி பிரசாரங்கள் நடந்து வருகின்றன. இந்த சட்டத்தை எதிர்ப்பவர்களில் கம்பாலா நகரை சேர்ந்த பாதிரியாரும் ஒருவர். அவர் சட்டத்தை எதிர்த்து இலட்சக்கணக்கான மக்களை திரட்டி ஊர்வலம் நடத்த திட்டமிட்டு, அதற்கான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார். இவர் தனது ஆதரவாளர் கூட்டத்தை கிறிஸ்தவ தேவாலயத்தில் கூட்டினார். அதில் சுமார் 300 ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். அவர்கள் முன்னிலையில் ஓரினச்சேர்க்கை தொடர்பான ஆபாச படங்களை திரையிட்டு ஆதரவு திரட்டினார். இது தொடர்பாக காவல்துறையினர் பாதிரியார் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இடியமீன் இல்லாமல் போய்விட்டார்.

(மக்கள் முன் உரையாற்றும் பாதிரியார்)



போர்த்துக்கல்

# வெள்ளப் பெருக்கில் சிக்கி 40ற்கும் மேற்பட்டோர் பலி



போர்த்துக்கல் நாட்டில் மடய்ரா தீவின் தலைநகர் ஃபூன்சல் மற்றும் இதர பகுதிகளில் கடந்த சனிக்கிழமை மழை வெள்ளம் உட்புகுந்ததில் ஏற்பட்ட நிலச்சரிவால் 40ற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். தீவின் தென் பகுதிக்கு மீட்பு பணியாளர்கள் செல்ல முடியாதளவிற்கு வெள்ளப் பெருக்கு இருந்துள்ளது.

போர்த்துக்கல் மடய்ரா தீவு தன்னாட்சி அதிகாரம் பெற்றது. இங்கு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். இது 480 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டது. இங்கு கடந்த வாரம் காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் வெள்ளப் பெருக்கும், அதை தொடர்ந்து நிலச்சரிவும் ஏற்பட்டது. இதனால் வீடுகள், கட்டடங்கள் இடிந்து விழுந்தன. பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கு செல்லமுடியாத அளவிற்கு மரங்கள் விழுந்து முறிந்து வீதிகள் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்பட்டதுடன், வீதிகளிலும் வெள்ளம் சேறும் சகதியுமாக கரைபுரண்டு ஓடியுள்ளது. அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்புகொள்ள முடியாத அளவிற்கு தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டன, மின்சார மற்றும் குடிநீர் வசதிகள் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மடய்ரா தீவைப் பார்வையிட போர்த்துக்கல் பிரதமர் ஜோஸ் சோகிரேட்ஸ் நேரில் சென்றதுடன், புயல் மழையால் ஏற்பட்ட பேரழிவு காரணமாக தீவு முழுக்க அவசர நிலை பிரகடனப் படுத்தியுள்ளார். அத்துடன், ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து உதவியும் கோரப்பட்டுள்ளது. பேரழிவில் சிக்கியவர்களை காப்பாற்றவும், பல்வேறு மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் கடற்படையினரும் உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டன.